# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2041/8 - 2017 ඔක්තෝබර් 16 වැනි සඳුදා - 2017.10.16

***2041/8 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

***2017 ஆம் ஆண்டின் 257 ஆம் இலக்கக் கட்டளை***

எனது குறிப்பு இல. : 4-3/11/2016/யூஏ/31.
பிர. செ. குறிப்பு இல. : ஜே/டீஎஸ்/2/9/4/13-2015.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளை யிடுகின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற
மறுசீரமைப்பு அமைச்சர்.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2017, ஒற்றோபர் 10.

அட்டவணை

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், யாழ்ப்பாணம்.

2. **காணியின் விபரம்** : வட மாகாணத்தில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில், இல. ஜே/81- கோட்டை கிராம அலுவலர் பிரிவில், யாழ்ப்பாணம் நகரம், பிரிவு இல. 1 (கோட்டை) யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லையில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2016.09.21 ஆந் திகதிய யா/ஜேஎப்/2016/114 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்ட காணித் துண்டுகளின் எல்லைகள் :

1. **துண்டு 'ஏ' - தான்டிக்குளம்கரை, அயிங்நூர்ட்டுவன் வயல் வரம்பு, வரம்பு கடய்யன்டிதிடல், வரி மதிப்பீட்டு இல. 66, கந்தப்பசேகரம் வீதி - விஸ்தீரணம் : 0.0580 ஹெக்டயார்**
வடக்கு : அந்ஜூதேவன்குளம், ஏ. சன்முகநாதனின் உரிமையாளர்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட யாழ்ப்பாண பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் உரிமை கோரும் அயிங்நூர்ட்டுவன் வயல் ; கிழக்கு : வரையறுக்கப்பட்ட யாழ்ப்பாண பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் உரிமை கோரும் அயிங்நூர்ட்டுவன் வயல் மற்றும் துண்டு பீ ; தெற்கு : துண்டு பீ மற்றும் வடிகால் ; மேற்கு : வடிகால் மற்றும் அந்ஜூதேவன்குளம்.

2. **துண்டு 'பீ' - தான்டிக்குளம்கரை, அயிங்நூர்ட்டுவன் வயல் வரம்பு கடய்யன்டிதிடல், வரி மதிப்பீட்டு இல. 72, கந்தப்பசேகரம் வீதி - விஸ்தீரணம் : 0.0403 ஹெக்டயார்**
வடக்கு : துண்டு ஏ மற்றும் வரையறுக்கப்பட்ட யாழ்ப்பாண பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் உரிமை கோரும் அயிங்நூர்ட்டுவன் வயல் ; கிழக்கு : வரையறுக்கப்பட்ட யாழ்ப்பாண பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், நடராசா மற்றும் உரிமை கோருபவர் தெரியாத அயிங்நூர்ட்டுவன் வயல் ; தெற்கு : உரிமை கோருபவர் தெரியாத அயிங்நூர்ட்டுவன் வயல் மற்றும் வடிகால் ; மேற்கு : வடிகால் மற்றும் துண்டு ஏ.

3. **துண்டு 'சீ' - முத்தவேலி வடக்கு வயல், வரி மதிப்பீட்டு இல. 78, முன்னேஸ்வரம் வீதி - விஸ்தீரணம் : 0.0763 ஹெக்டயார்**
வடக்கு : ரொபின் தம்பு உரிமை கோரும் முத்தவேலி வடக்கு வயல் மற்றும் வடிகால் ; கிழக்கு : வடிகால் மற்றும் முன்னேஸ்வரம் வீதி ; தெற்கு : முன்னேஸ்வரம் வீதி மற்றும் துண்டு டீ ; மேற்கு : துண்டு டீ மற்றும் ரொபின் தம்பு உரிமை கோரும் முத்தவேலி வடக்கு வயல்.



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**4. துண்டு ‘டீ’ - முத்தவேலி வடக்கு வயல், வரி மதிப்பீட்டு இலக்கம் தெரியாத முன்னேஸ்வரம் வீதி - விஸ்தீரணம் : 0.0812 ஹெக்டயார்**

*வடக்கு : றொபின் தம்பு உரிமை கோரும் முத்தவேலி வடக்கு வயல் மற்றும் துண்டு சீ ; கிழக்கு : துண்டு சீ மற்றும் முன்னேஸ்வரம் வீதி ; தெற்கு : முன்னேஸ்வரம் வீதி மற்றும் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உரித்தான சொத்துக்கள் ; மேற்கு : யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உரித்தான சொத்துக்கள் மற்றும் றொபின் தம்பு உரிமை கோரும் முத்தவேலி வடக்கு வயல்.*

*11 - 53*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*